Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

# Secret Love in *Agananooru*

**Dr. B. Periyaswamy**, Assistant Professor, Department of Tamil, Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699

**Received:** 16 February 2025; **Revised:** 17 April 2025; **Accepted:** 23 June 2025; **Available Online:** 30 June 2025.

## Abstract

*Love has remained a universal force shaping human relationships across all ages. In the Tamil literary tradition, our ancestors' conceptualized life's emotional experiences through two major dimensions. One is kalavu (premarital or secret love) and karpu (marital or wedded love). Agananooru provides poetic evidence about them and reflect the emotional landscapes and cultural norms of the period. This article examines how love has been expressed in Agananooru. It draws attention to the poetic power and symbolic references employed by Sangam poets. It highlights the themes of introspection and emotional depth (akattinai), the clandestine phase of relationships (kalavu), and the use of natural and cultural symbols such as kuriyidam cuttal (secret signs and signals), ampal (lotus), alar (flower), and veriyaatal (ritualistic dances). It explores the indispensable role of the Thozhi (female companion) in sustaining love between hero (Talaivan) and beloved (Talaivi). The article demonstrates that Agananooru is a collection of poems with socio-cultural record of early Tamil society that has civilized love, relationships and gender roles. It also reaffirms the relevance of Sangam poetry in understanding human emotions and cultural values that transcend the patterns of time.*

**Keywords:** *Agananooru, Tolkappiyam*, Kalavu, Karpu.

## References

[1] Aasiriyar Kuzhu. *Akananuru.* New Century Book House, Chennai, 2007.
[2] Aandal Priyatharsini. *Pen Vaasana.* Vikatan Prasuram, 2007.
[3] Arokiyanathan, S. *Ilakkiya Saaral.* Kavya, Bengaluru, 1996.
[4] Ilampooranar (Urai). *Tholkappiya Porulathikaram.* Paari Nilaiyam, Chennai, 2007.
[5] Sarala Rasagopalan. *Sanga Ilakkiyathil Thozi.* Oli Pathippagam, Chennai, 1986.
[6] Namachivaya Mudhaliyar, Ka. (Pathi). *Iraiyanar Kalaviyal.* CRN & Sons, Chennai, 1943.
[7] Manickam, Va. Suba. *Tamizh Kaadhal.* Paari Nilaiyam, Chennai, 1962.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

# அகநானூற்றின் வழி களவுக்காதல்

**முனைவர் பீ. பெரியசாமி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699

**ஆய்வுச்சுருக்கம்**

*காலங்காலமாக காதல் என்பது எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் ஆயுதமாய் உள்ளது.இக்காதல் வாழ்வை நம் முன்னோர்கள் களவு, கற்பு என இரண்டாகப் பகுத்தனர்.இவைகளுக்குரிய இலக்கணத்தை நம் பழமையான இலக்கணநூலாகிய தொல்காப்பியம் களவியல், கற்பியல் எனும் இயல்களின் வழி விரித்துரைக்கின்றது. இக்களவுக்காதல் குறித்த செய்திகள் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையாகும். இதில் அகத்திணை, களவு, குறியிடம் சுட்டல், ஆம்பல், அலர், வெறியாடல், அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, தோழி, தோழியின் இயல்புகள் எனும் உட்தலைப்புகளின் வழி அகநானூற்றின் வழி களவுக்காதல் எனும் இக்கட்டுரை சங்ககால மக்களின் களவுக்காதலை ஆராய்ந்துள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** அகநானூறு, தொல்காப்பியம், களவு, கற்பு.

**முன்னுரை**

சங்ககாலச் சமுதாய நிலை, மக்களின் பழக்கவழக்கங்கள், வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றைக் கருப்பொருள்களாகக் கொண்டு அச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்றன.திணை இலக்கியங்கள் முதல், கரு, உரிப்பொருளை வகுத்துக் கொண்டு, திணை, துறைக் கோட்பாட்டு உத்தியில் இருப்பிடம் சார்ந்த வாழ்க்கை முறையை வெளிப்படுத்தியது.இந்த செவ்வியல் இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல் நெறிகளைச் சிறப்பான முறையில் எடுத்தியம்புகின்றன. பழந்தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தினர். அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருளையும் வாழ்வின் உறுதிப் பொருட்களாகக் கருதி வாழ்ந்தனர்.இதன் அடிப்படையில் தங்கள் வாழ்வை அகம், புறம் என்ற ஒழுக்க முறைகளாகப் பகுத்து, அதனை சங்க இலக்கிய பாடல்களில் பதிவு செய்தனர்.அவற்றுள் சங்ககால மகளிரின் களவு வாழ்வைப் பற்றி அகநானூறு குறிப்பிடுவனவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

**அகத்திணை**

சங்கப் பாடல்களில் வாழ்வியல் விழுமியங்களான காதல், வீரம், கொடை, புகழ், நட்பு ஆகியவற்றை உள்ளடக்கமாகப் பதிவு செய்தனர்.சங்ககால மக்கள் அகத்திணையைக் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழாகப் பகுத்துள்ளனர். இதனை,

**கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல். பொருள். அகத். நூ.** 1)

என்ற தொல்காப்பியர் நூற்பா வழி அறிய முடிகிறது.அகம் என்பது உள்ளத்தைக் குறித்து நிற்கிறது.உள்ளத்தில் எழுந்த அவா, உடல்வழிப் படர்ந்து உள்ளத்தைக் குளிர்விப்பது ஆகலின் உள்ளம் என்பதனோடு தொடர்புப்படுத்தி “அகம்' என்றனர்.அன்பிற்கும், இன்பிற்கும் அடிப்படை உடல் அன்று, உள்ளமே என்பதை இப்பெயர் உணர்த்தி நிற்கிறது. அகத்திணையைப் பாடிய தொல்காப்பியரும்,

**அகப் பொருளாவது, போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன்தானோ அறிதலின் (தொல். பொருள். இளம்பூரணர் உரை, ப. 3)**

Volume 3, Issue 1 June 2025 E-ISSN: 2584-167X

என்ற மனதில் அனுபவிக்கக் கூடியதை அகம் என்கிறார்.

அகத்திணைப் பொருளான காமமோ ஆண், பெண் என்னும் பிரிவமைந்த உயர்திணை, அஃறிணை உயிர்க்கெல்லாம் பொதுவானது. இதனை,

**எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும் (தொல். பொருள். பொருள். நூ. 219)**

என்னும் அடிகளின்வழி உணரலாம்.உடம்பொடு இயற்கையாக அமைந்தது காமம் ஆகும் இத்தகைய (அக) வாழ்வு களவு, கற்பு என்ற இரு நிலைகளில் நடைபெறுகின்றன.

**களவு**

ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும் கொடுப்போரும் கொள்வோரும் இன்றி ஊழ்வினையால் தாமே எதிர்ப்பட்டு இணைவது களவு எனப்படுகிறது.காதலர் இருவர் யாருமறியாமல் தனிமையில் மறைவாக ஒழுகி வருதலே களவு எனப்படுகிறது. இந்த காமக் கூட்டத்தினைத் தொல்காப்பியர்,

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பால தாணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே (தொல். பொருள். களவு. நூ. 90.)**

என்று கூறுகிறார்.அகத்திணையில் களவு என்பது மிக சிறப்பாகப் போற்றப்படுகிறது. இக்களவொழுக்கம் இரண்டு திங்கள் (மாதம்) நடைபெறும் என்பதை,

**களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்**
**திங்கள் இரண்டின் அகமென மொழிப (இறையனார் அகப்பொருள் நூ. 92.)**

என்னும் அடிகள் வரையறுத்துக் காட்டுகின்றன. மேலும், களவு ஒழுக்கமானது ஆண்,பெண் இருவர் உள்ளத்தும் உள்நின்று சுரந்த அன்பின் பெருக்கினால் தோன்றுவது என்பதை,

**தானே அவளே தமியர் காணக்**
**காமப் புணர்ச்சி ஒருவயின் ஒத்தல் (இறையனார் அகப்பொருள் நூ.2)**

என்றும் விளக்கிக் காட்டுகிறது.ஒத்தார் இருவர் தாமே கூடும் கூட்டம் களவு எனப்படுகிறது.இவ்வாறு களவு வாழ்க்கையைப் பற்றி இலக்கண, இலக்கியங்கள் வரையறுத்துள்ளது.யாரும் அறியாமல் மறைவாக ஒழுகி வரும் காதல் வாழ்வு, கற்பில் (திருமண வாழ்வு) முடிவடைந்தால் மட்டுமே அது களவு வாழ்க்கையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. களவில் தோன்றி கற்பில் முடியும் வாழ்வே சிறந்தது என்பதை,

> **களவு ஒரு குறிக்கோள் அன்று, முடிவான பயன் அன்று.ஒரு குறிக்கோளை, முடிந்த பயனை அடைதற்கு உரிய நெறியேயாம்.கற்பாக - திருமணமாக முடியுங்கால், களவுநெறி நன்னெறி எனப் போற்றப்படும்.இன்றேல் கள்ளத்தனம் என இகழப்படும். களவின் முடிவு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும் அறங்களுள் தலையாயது (தமிழ்க்காதல், ப. 88-89)**

என்று வ.சுப. மாணிக்கனார் கூறுகிறார்.உள்ளம் கலந்த காதலர்கள் களவு வாழ்வை மட்டுமே மேற்கொண்டு வாழ முடியாது. அவர்களின் களவின் முற்று நிலை திருமணம் க(கற்பூ என்ற வாழ்வை அடைவதாக இருத்தல் நலம் பயக்கும். இல்லையேல் ஊராரின் பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடும். எனவே களவு வாழ்வு கற்பில் முடிந்து இல்லறம் மாண்புற நடத்தலே சிறந்த வாழ்வாகக் கருதப்படுகிறது. இவை எல்லாம் பெண் உடலை அடிப்படையாகக் கொண்டே வெளிப்படுத்தப்பட்டன.

**குறியிடம் சுட்டல்**

களவொழுக்கத்தில் தோழியின் உதவியால் காதலர் மறைவாக சந்திக்கும் இடம் “குறியிடம்” எனக் கூறப்படுகிறது.தலைவன், தலைவி இருவரும் சந்திக்கும் குறியிடத்தைத் தேர்வு செய்வது தோழியின் செயலாக இருக்கிறது. இந்நிகழ்வு இரவிலும், பகலிலும்

குறிப்பிட்ட இடங்களில் நடைபெறுவதால் இரவுக்குறி, பகற்குறி என்று வகைப்படுத்தப்படுவதை,

**குறியெனப் படுவ திரவினும் பகலினும்**
**அறியக் கிளந்த ஆற்ற தென்ப (தொல். பொருள். களவு. நூ. 128)**

எனும் நூற்பாவால் அறியலாம். இல்லத்திற்குள் உள்ளோர் பேசும் மொழிகளைக் கேட்கும்படியாக அமைந்த அண்மை இடம் இரவுக்குறிக்கு உரிய இடமாகவும், மதிலின் புறத்தே உள்ள தலைவியால் நன்கு அறியப்பட்ட இடம் பகற்குறிக்கு உரிய இடமாகவும் கொள்ளப்படுவதை,

**இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**
**மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே**
**மனையகம் புகாஅக் காலை யான (தொல். பொருள். களவு. நூ.129)**
**பகற்புணர் களனே புறனென மொழிப**
**அவளறி வுணர வருவழி யான (தொல். பொருள். களவு. நூ.180)**

என்னும் நூற்பாக்களில் விளக்குகிறார் தொல்காப்பியர்.

இரவுக்குறி வரும் தலைவன், தன்னைப் புணராமல் போயின் இன்றே என் உயிரை விடுவேன் என தோழியிடம் கூறுவதாக,

**கடி கொள வழங்கார் ஆறே ஆயிடை**
**எல்லிற்று என்னான் வென் வேல் ஏந்தி**
**நசைதர வந்த நன்ன ராளன்**
**நெஞ்சு பழுதாக வறுவியன் பெயரின்**
**இன்று இப்பாழுதும் யான் வாழலெனே (அகம். 362: 6-10)**

எனும் வெள்ளிவீதியாரின் பாடல் அமைந்துள்ளது.தாய், தந்தை யாரும் அறியாமல் இரவில் தலைவனைக் காணவரும் அச்சமும், தான் வந்ததற்கான காரணம் நிறைவேறாத ஏக்கமும் இணைந்து தலைவியைக் கோபத்தின் உச்சநிலைக்கு இட்டுச் செல்கிறது.தனக்கான புணர்வு ஏற்படாத சூழலில் தன் உயிரையும் துறக்க துணியும் நிலையிலிருந்து தலைவியின் காம வேட்கை வெளிப்படுவதை உணர முடிகிறது.

**ஆம்பல், அலர்**

தலைவன், தலைவியரின் களவு வாழ்வு கற்பு வாழ்வாக மாறுவதற்குத்துணைப்புரிவன அம்பல், அலர் எனும் இரண்டுமேயாகும்.

**தலைவியின் காதல் ஒழுக்கம்பற்றி ஊர்ப்பெண்டிர் ஒருவருக்கொருவர் தம்முள்ளே பேசிக் கொள்வது அம்பல் எனவும், வெளிப்படையாகப் பேசுவது அலர் எனவும் பெயர் பெறும் என்பர் (தமிழ்க்காதல், ப. 71)**

களவு வாழ்க்கையை வெளிப்படுத்துவன அம்பலும், அலருமாகும் என்பதையும், அதற்குக் காரணமானவன் தலைவன் என்பதையும் தொல்காப்பியர்,

**ஆம்பலும் அலருங் களவுவெளிப் படுத்தலின்**
**அங்கதன் முதல்வன் கிழவ னாகும் (தொல். பொருள். களவு. நூ. 197)**

என்று கூறுகிறார். தலைவன் தலைவியிடையே நிகழும் காதல் பிறருக்குத் தெரியாமல்மொட்டு நிலையிலிருப்பதை அம்பல் நிலையென்றும், மொட்டு மலர்ந்து மணம் வீசுவதைப் போல் அனைவராலும் பேசப்படும் நிலையில் இருப்பதை அலர் நிலையென்றும் கூறலாம். அம்பலும், அலரும் உள்ளூர்ப் பெண்டிராலே நிகழும். இத்தகைய பெண்டிரை வெவ்வாய்ப்பெண்டிர், அம்பல் பெண்டிர் என்று அகநானூற்றுப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

**வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும் (அகம். 50: 3)**
**அலர்வினை மேவல் அம்பற் பெண்டிர் (அகம். 203: 3)**

என்ற பாடல்கள் புலப்படுத்துகின்றன.

**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

அம்பல் பேசும் பெண்டிரின் செய்கைகளாக, கடைக்கண்ணில் பார்த்து மூக்கின் மீது சுட்டுவிரல் வைத்துப் பேசுவர் என ஆண்பாற்புலவர் கூறியிருப்பது சிறப்பான ஒன்றாகும். பிரிந்து சென்ற தலைவனின் நினைவால், தலைவிக்குப் பசலை ஏற்படுகிறது.தலைவியின் உடல் மெலிவைக் கண்டு ஊரவர் அலர் பேசுவதால், அவள் மனம் வருந்துகிறது.

**காடு இறந்தனரே காதலர் மாமை**
**அரிநுண் பசலை பாஅய் பீரத்து**
**எழில் மலர் புரைதல் வேண்டும் அலரே (அகம். 45: 6-8)**

என்னும் அடிகளால் உணரமுடிகிறது.இதன் மூலமாக அலரானது, தலைவன் தலைவியின்கற்பு மனத்திற்கு வழிகோலுகிறது என்பது புலனாகிறது. பெண்பாற் புலவர்கள் தங்கள் அகவாழ்வையும், வேட்கையையும் எவ்வித தயக்கமின்றி வெளிப்படுத்தியிருப்பினும், ஊரவர் தூற்றும் அம்பல், அலருக்காக அச்சம் அடைந்து, உயிரை விடவும் துணிந்தனர்என்ற கருத்துப் பெறப்படுகிறது.

**வெறியாடல்**

களவொழுக்கத்தில் பிரிந்த தலைவனால் தலைவிக்கு ஏற்பட்ட உடல் மாறுபாட்டைக் கண்டு நற்றாயும், செவிலியும் கவலை கொண்டு, அதற்கான காரணத்தை முதுவாய்ப் பெண்டிரிடம் வினவுவர். தலைவியின் மேனி வேறுபாடு தெய்வத்தால் உண்டாயிற்று என முதுவாய் பெண்டிர் கூற, அதனை நம்பிய அன்னை வேலனை அழைத்துப் பூசை நிகழ்த்துவாள் .இதுவே வெறியாடல் எனப்படுகிறது. இதனை,

**கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும் (தொல். பொருள். பொருளியல். நூ.118)**

எனும் நூற்பாவால் அறியலாம்.தலைவியின் காதலுக்கு இடையூறாக இருக்கும்நிகழ்வுகளினால் அவளுக்குப் பசலை ஏற்பட்டு மேனி வேறுபாடு அடைகிறது.சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்களுள் அதிகளவில் வெறியாடலைப் பற்றி பாடி வெறிபாடிய காமக் கண்ணியார் எனப் பெயர் பெற்ற புலவர் இவரே ஆவார்.வெறியாடல் அறத்தொடு நிற்கவும், வரைவு கடாவவும் பயன்படுகிறது.தலைவனின் மயக்கத்தால் நோய் தீர்ந்தது என்பதை அறியாமல் வெறியாட்டினால்தான் நோய் தீர்ந்தது என்று நற்றாயும், செவிலியும் மகிழ்ச்சி அடைகின்றனர் .இவர்களின் அறியாமையை தலைவி, தோழியிடம் கூறி நகைக்கிறாள். இதனை,

**நல்மனை நெடுநகர்க் காவலர் அறியாமை**
**தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப**
**இன்உயிர் குழைய முயங்குதொறும் மெய்ம் மலிந்து**
**நக்கனென் அல்லெனோ யானே எய்த்த (அகம். 22: 16-19)**

எனவரும் பாடலால் அறிய முடிகிறது.

**அறத்தொடு நிற்றல்**

தலைவியின் களவொழுக்கத்தை தோழி, காப்பு மிகுதி, நொதுமலர் வரைவு, தமர் வரைவு மறுத்தல் போன்ற காரணங்களுக்கு அஞ்சி அவளின் பெற்றோரிடம் எடுத்து கூறும் நிகழ்வே அறத்தொடு நிற்றல் எனப்படுகிறது. தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் - தந்தை தமையர்க்கும் முறையே அறத்தொடு நிற்கின்றனர் .களவொழுக்கம் எல்லா நிலைகளிலும் அறத்தொடு நிலையில்புலப்படுத்தப்படுவதில்லை. தலைவன், தலைவி இணைவதற்குத் தடையேற்படும் பொழுது தான் அறத்தொடு நிற்றல் தோன்றுகிறது. இந்நிலை, உரியவர்களால், உரிய முறைப்படி எடுத்தியம்பப்படும் என்பதை,

**அறத்தொடு நிற்குங் காலத் தன்றி**
**அறத்தியல் மரபிலள் தோழி என்ப (தொல். பொருள். பொருளியல். நூ.204)**

எனும் நுற்பாவால் அறிய முடிகிறது. தோழி செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்றலை,

**அன்னை அறியினும் அறிக அலர்வாய்**

**அம் மென் சேறி கேட்பினும் கேட்க**
**பிறிது ஒன்று இன்மை அறியக் கூறி**
**கொடுஞ் சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்**
**கடுஞ் சூள் தருகுவன் நினக்கே (அகம். 110: 1-5)**

என்ற போந்தைப் பசலையார் கூறுகிறாள்.

**உடன்போக்கு**

தலைவியின் பெற்றோர் அவளது களவொழுக்கத்தை அறியாத நிலையிலும், அவ்வொழுக்கத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையிலும் உடன்போக்கு நிகழ்கிறது.தலைவன், தோழியின் இசைவுடன் தலைவியை அவர்தம் பெற்றோர் அறியாதவாறு தன்னுடன் அழைத்துச் சென்று வதுவை மணம் புரிதலே உடன்போக்கு எனப்படுகிறது.இச்செறிப்பு, ஊரலர், வெறியாட்டு, நொதுமலர் வரைவு போன்ற காரணங்களால் உடன்போக்கு நிகழ்கிறது. உடன்போக்கினைத் தொல்காப்பியர், **"கொண்டுதலைக் கழிதல்" (33)** என்கிறார்.

**தோழி**

அகத்திணை மாந்தர்களுள் பெரும்பொறுப்பு உடையவள் தோழி.அவள் அறிவும், பண்பும், திறனும் மிக்கவளாக இருக்கிறாள்.தலைவனுக்கும், தலைவிக்கும் தக்க வழிகாட்டி களவு வாழ்விலிருந்து கற்பு வாழ்வு தொடங்கும் வரை அவர்களை நன்னெறிப்படுத்தும் ஆற்றல் உடையவளாக திகழ்கிறாள்.அத்தகைய தோழியானவள், தலைவி, செவிலி, நற்றாய் முதலானவர்களுடன் பேசும் போது அவர்களின் மனநிலையை உணர்ந்து, பயன்தரும் முறையில் கூற்று நிகழ்த்துவாள். களவு, கற்பு ஆகிய இரு நிலைகளிலும் பெரும் பங்கு வகிக்கும் இவள் தலைவியொடு ஒன்றுபட்ட உள்ளத்தினள்என்பது,

**யாமே பிரிவின்றி யைந்த துவரா நட்பின்**
**இருதலைப்புள்ளி ஒர்உயிர் அம்மே (அகம். 12: 4-5)**

என்னும் தோழியின் கூற்றால் அறிய முடிகிறது.

**தோழியின் இயல்புகள்**

அக இலக்கியங்களில் தோழி, தலைவியின் உரிமையையும், செயலையும்பெற்றவளாகத் திகழ்கிறாள்.குறியிடம் கூறுதல், உடன்போக்கு, செலவழுங்குவித்தல், வாயில் மறுத்தல் முதலிய இடங்களில் தோழி தானாகவே செயலாற்றும் உரிமை உடையவளாகிறாள்.தலைவியின் பொருட்டாக அவள் செயல்களில் விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் செயல்படுகிறாள். தலைவியிடம் கேளாமல் தோழி, தலைவனுக்குக் குறை நேர்ந்ததை, **"இன்உயிர் அன்ன நின்னொடும் சூழாது" (அகம். 268: 10)** எனும் அடியால் அறிய முடிகிறது.தலைவியின் அலர் குறித்து ஊரார் பேசும் அலரைச் செவிமடுத்துத் தலைவனை விரைவில் வரைய வேண்டி உணர்த்தும் திறன் கொண்டவள்.களவில் துணை நிற்பது போலக் கற்பிலும் உடனிருந்து உதவிசெய்யும் பாங்குடையவள்.தலைவியை மகள் என்று உரிமை கொண்டாடும் அளவிற்குத் தாய்மைப்பாசம் கொண்டவள். இதனை, **"நின்றோன் போலும் இன்றும் என் மகட்கே" (அகம். 110: 25)** எனும் அடியால் உணரலாம்.தோழி அகப்பாடல்களில் முக்கியப் பங்கு பெறுவதை,

> ***காதல் உணர்வுகளுக்கு ஆளாக்கப்படும் போது கூட மண்பானையிடத்துக் காணும்*** **நீர்க்கசிவாய்த் தன் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு தலைவிக்கு இருக்கிறது.காதலில் ஈடுபட்டவளாகவும், அகப்பாடல்கள் மையப்பாடு பொருளாகவும் தலைவி இருந்தாலும், பாடுவோன் அவளது கூற்றாக காதலுணர்வுகளைக் கூற முடியாது.இலக்கண முறைகளால் அடைக்கப்பட்ட தலைவியினது காதலுணர்வின் இலக்கிய வாயிலே தோழி எனும் பாத்திரம்.தலைவியின் அடக்கப்பட்ட உணர்வினை வெளியிடுபவளாக, அகத்துறைப் பாடல்களைப் பாடியுள்ளனர் புலவர்கள். (ஆரோக்கியநாதன், எஸ்., இலக்கியச் சாரல், ப. 55)**

என்ற கருத்து உணர்த்துகிறது. சங்க இலக்கியத்தைப் பொறுத்த வரையில் தோழியானவள், ஒரு இலக்கிய மரபாக, தலைவியின் வெளியிட முடியாத உணர்வுகளை வெளிப்படுத்த உதவும் ஒரு வடிகாலைப் போலவே பெரிதும் கையாளப்பட்டிருக்கிறாள். தலைவியின் சம வயதே கொண்டிருக்கும் தோழிக்கும், அவ்வயதிற்குரிய உணர்வுகள், எண்ணங்கள், சிந்தனைகள் தோன்றியிருக்கும்.ஆனால் எந்தவொரு சங்கப் பாடலும் அவளின் உணர்வுகளைப் பற்றியோ, வாழ்க்கையைப் பற்றியோ குறிப்பிடவில்லை.தன் காமத்தைத் தலைவி, தலைவனிடம் கூறத் தடைவிதிக்கும் தொல்காப்பியம், அதனை தோழி மூலம் தலைவனுக்குத் தெரிவிக்கத் தடையேதும் கூறவில்லை.இங்கு தலைவியின் எண்ண ஒட்டத்தை ஒலிக்கும் குரலாகவேத் தோழியைப் புனைந்து காட்டியுள்ளார்.

தோழி தன் நலனை நினையாமல் தன் இன்பத்திற்கு ஏங்காமல் தலைவன், தலைவனின் ஆக்கத்திற்காகவே வாழ்நாள் முழுவதும் பாடுபடும் தியாக உள்ளம் கொண்டவள் என்பதை,

> **அதனால் தான் பரத்தையிடம் நட்புக் கொண்ட தலைவனை நீக்கி, தோழியின் நலனைச் சிறிதும் நாடாது தன்னையே கவனித்துக் கொள்ளும் தலைவியை விலக்கி, ஓய்வு நிலவுற்ற செவிலியைத் தவிர்த்து, அதிக அக்கறை கொள்ளாத நற்றாயை அகற்றி, எப்போதோ எட்டிப் பார்க்கும் கண்டோரைத் தவிர்த்து, நன்மைக்குத் துணைப் போகாத பாணனைக் கடந்து புலவரின் நெஞ்சம் தோழி படைப்பையே தன் வாயிலாகக் கொள்வதில் மகிழ்ச்சி பெறுகிறது! (சரளா இராஜகோபாலன், 'சங்க இலக்கியத்தில் தோழி', ப. 25)**

என்ற சரளா இராசகோபாலனின் கருத்து உண்மையாகின்றது.

> **தோழி - தாய், தந்த, சகோதரி, சகோதரன், ஆசான், சேவகன், தாதி எனச் சகல உணர்வுத் தளத்தின் ஒற்றை ஆதாரம் (ஆண்டாள் பிரியதர்சினி, 'பெண் வாசனை ப. 59.)**

என தோழியின் உன்னதமான நிலையை ஆண்டாள் பிரியதர்சினி அவர்கள் விளக்குகிறார் .தலைவன் தலைவியை உடன்போக்கிற்கு வழிகாட்டி அனுப்பும் நிலையில், திருமணம் முடிந்து புகுந்தவீடு செல்லும் மகளை வழியனுப்பும் தாய் தந்தைக்குரிய நிலைப்பாட்டை எய்துகிறாள்.

**முடிவுரை**

காதல் என்பது அனைத்து உயிர்களிடமும் காணப்படும் இயல்பான உணர்வு.அந்த காதலை அகம் என்று அடையாளப்படுத்தினர் சங்கால மக்கள். அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட அகத்திற்குரிய நிலன்கள் (திணைகள்) ஏழு என்று வரையறை செய்தனர். அவ்வேழு திணைக்குரிய மக்களின் காதல் ஒழுக்கங்களை எடுத்தியம்புவதை அகத்திணை என்றனர். அதற்குரிய மாந்தர்களை அகத்திணை மாந்தர்கள் என்றனர். அவ்வகத்திணையைக் களவு, கற்பு என இரண்டாகப் பகுத்தனர்.அதில் களவு திருமணத்திற்கு முந்தைய காதலை எடுத்துரைப்பது.கற்பு திருமணத்திற்கு பிந்தைய காதலை எடுத்துரைப்பது. இக்கட்டுரையில் களவுக்காதல் குறித்த அகநானூற்றுப் பாடல் செய்திகளைச் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

**குறிப்புகள்**

[1] ஆசிரியர் குழு, அகநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
[2] ஆண்டாள் பிரியதர்சினி. பெண் வாசனை. விகடன் பிரசுரம், 2007.
[3] ஆரோக்கியநாதன். எஸ். இலக்கியச்சாரல். காவ்யா, பெங்களுர், 1996.
[4] இளம்பூரணர் (உரை). தொல்காப்பிய பொருளதிகாரம். பாரி நிலையம், சென்னை. 2007.
[5] சரளா இராசகோபாலன். சங்க இலக்கியத்தில் தோழி. ஒளி பதிப்பகம், சென்னை, 1986.
[6] நமச்சிவாய முதலியார், கா. (பதி). இறையனார் களவியல். CRN & Sons, சென்னை, 1943.
[7] மாணிக்கம், வ. சுப. தமிழ்க்காதல். பாரி நிலையம், சென்னை, 1962.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 3, Issue 1 June 2025 E-ISSN: 2584-167X

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.